பக்கங்கள்: 07

# காலைக்கதிர்

Kālaikkathir

மாலைப்பதிப்பு

சாயல் 01 வள்ளுவர் ஆண்டு 2051 கார்த்திகை 31 புதன்கிழமை 16.12.2020 கதிர் 271

## 2021 மார்ச் மாதத்துக்குள் மாகாண சபைத் தேர்தல்!

### அரசு அறிவிப்பு

2021 மார்ச் மாதத்துக்கு முன்னர் மாகாண சபைத் தேர்தலை நடத்துவதற்கு அரசு எதிர்பார்க்கின்றது எனவும், தேர்தல் தொடர்பில் ஆராய்வதற்காக ஆராய்வதற்காக கட்சி தலைவர்கள் கூட்டமொன்று நடத்தப்படவுள்ளது எனவும் அமைச்சரவைப் பேச்சாளரும் அமைச்சருமான கெஹலிய ரம்புக்வெல தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியவை வருமாறு:-

2

## வடக்கில் கொரோனா பரவ மக்களே காரணம்; இங்கு இன்னும் கொத்தணி உருவாகவில்லை

### இப்படிக் கூறுகின்றார் ஆளுநர் சார்ள்ஸ்



யாழ்ப்பாணம்,டிசெ.16

வடக்கு மாகாணத்தில் அதிகளவில் கொரோனா வைரஸ் தொற்றுப் பரவலுக்கு மக்கள் ஒத்துழையாமையே காரணம்.

- இவ்வாறு வடக்கு மாகாண ஆளுநர் திருமதி பி.எஸ்.எம். சார்ள்ஸ் குற்றஞ்சாட்டினார்.

யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள வடக்கு மாகாண ஆளுநர் அலுவலகத்தில் இன்று ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

2

## மேலும் மூவர் உயிரிழப்பு கொரோனா மரணம் 157

இலங்கையில் கொரோனா வைரஸ் தொற்றுக்கு இலக்காகி மேலும் மூன்று பேர் உயிரிழந்துள்ளனர்.

இதன்படி நாட்டில் கொரோனாத் தொற்றால் உயிரிழந்தவர்களின்

2

# யாழ்ப்பாணம் மாநகர சபை ‘பட்ஜட்’ மீண்டும் தோற்கடிப்பு

### மேயர் பதவியை இழக்கின்றார் ஆனல்ட்



**(எஸ்.நிதர்ஷன்)**

**தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் ஆளுகைக்குட்பட்ட யாழ்ப்பாணம் மாநகர சபையின் 2021ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டம் 3 மேலதிக வாக்குகளால் தோற்கடிக்கப்பட்டது.**

**வரவு - செலவுத் திட்டத்துக்கு ஆதரவாக 21 வாக்குகளும், எதிராக 24 வாக்குகளும் அளிக்கப்பட்டன.**

2

## ஜனாஸா எரிப்புக்கு எதிராகப் போராட்டம்



கொரோனாத் தொற்றால் உயிரிழக்கும் இஸ்லாமியர்களின் ஜனாஸாக்களை எரிக்காது அடக்கம் செய்யக்

2

### தமிழ்த் தேசியக் கட்சிகளின் ஒன்றிணைவால்

## செட்டிகுளம் பிரதேச சபை தவிசாளராக கூட்டமைப்பின் ஜெகதீஸ்வரன் தெரிவு



வவுனியா, செட்டிகுளம் பிரதேச சபையின் புதிய தவிசாளராக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பைச் சேர்ந்த சுப்பையா ஜெகதீஸ்வரன் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் ஆளுகைக்குள் இருந்த செட்டிகுளம் பிரதேசசபையின் 2021ஆம் ஆண்டுக்கான வரவு-செலவுத்திட்டம் இரண்டு தடவைகள்

2

### மேலும் 8 பேருக்குக் கொரோனாத் தொற்று

## மருதனார்மடம் கொத்தணி பாதிப்பு 66 ஆக அதிகரிப்பு

(எஸ்.நிதர்ஷன், ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம், மருதனார்மடம் பொதுச் சந்தை கொத்தணியில் மேலும் 8 பேருக்கு கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது என யாழ். போதனா வைத்தியசாலையின் பணிப்பாளர் வைத்திய கலாநிதி த. சத்தியமூர்த்தி தெரிவித்துள்ளார்.

இன்று யாழ். மருத்துவபீட ஆய்வுகூடத்தில் மேற்கொள்ளப்பட்ட சங்கானை சந்தை வர்த்தகர்கள் 100 பேரின்

2

### காணாமல்போனவர்கள் தொடர்பில்

## கோட்டாவும் சவேந்திர சில்வாவும் பொறுப்புக்கூற வேண்டியவர்கள்

### ஜஸ்மின் சூக்கா சுட்டிக்காட்டு



“இலங்கை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவும், இராணுவத் தளபதி சவேந்திர சில்வாவும் காணாமல்போன நூற்றுக்கணக்கான தமிழர்கள் மற்றும் சிங்களவர்கள் குறித்து சர்வதேச மற்றும் உள்நாட்டுச் சட்டத்தின்படி

2

## சமூகத் தொற்றை இனியாவது அரசு ஒப்புக்கொள்ளவேண்டும்

### ஆளுந்தரப்பு எம்.பி. திஸ்ஸ விதாரண இடித்துரைப்பு

இலங்கையில் கொரோனா வைரஸ் தற்போது கொத்தணிகளுக்குள் மாத்திரமின்றி சமூகம் முழுவதும் பரவி வருகின்றது. இனியாவது இந்த உண்மையை அரச தரப்பினர் உட்பட அனைவரும் ஏற்றுக்கொள்ள வேண்டும்.

- இவ்வாறு ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியின் நாடாளுமன்ற உறுப்பினருமான பேராசிரியர் திஸ்ஸ விதாரண தெரிவித்தார்.

2

## நாட்டை முழுமையாக முடக்குவதா? மக்களுக்கு ஏழு நாள்கள் அவகாசம்

### இராணுவத் தளபதி அறிவிப்பு



கிறிஸ்மஸ் வார நீண்ட விடுமுறையில் மேல் மாகாணத்துக்குள் நுழையவோ அல்லது வெளியேறவோ மற்றும் நாடு முழுவதும் ஊரடங்கு உத்தரவு அமுல்படுத்துவதற்கு இதுவரை விரும்பவில்லை. எவ்வாறாயினும், பண்டிகை வார இறுதிக்கு இன்னும் ஒரு வாரம் இருப்பதால் நிலைமை மறுபரிசீலனை செய்யப்படும்.

2

## திருநெல்வேலி பொதுச் சந்தையில் 313 பேருக்கு பி.சி.ஆர். பரிசோதனை



(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணம்-திருநெல்வேலி பொதுச் சந்தையில் வியாபார நடவடிக்கைகளை மேற்கொள்ளும் வியாபாரிகள் 313 பேரின் மாதிரிகள் பி.சி. ஆர். பரிசோதனைக்காக இன்று பெறப்பட்டுள்ளன.

சுகாதார அமைச்சின் அறிவுறுத்தலுக்கு அமைய நாடு முழுவதும் எழுமாறாக தெரிவு செய்யப்படுவோரிடம் பி.சி.ஆர்.

2

காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு



## மேலும் மூவர் ..........

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

எண்ணிக்கை 157ஆக உயர்ந்துள்ளது.

கொழும்பு - 14ஐச் சேர்ந்த 60 வயதுடைய பெண், கொழும்பு - 15ஐச் சேர்ந்த 85 வயதுடைய ஆண், கொழும்பு - 15ஐச் சேர்ந்த 84 வயதுடைய ஆண் ஆகியோரே கொரோனாவால் காவுகொள்ளப்பட்டுள்ளனர் என்று அரச தகவல் திணைக்களம் அறிவித்துள்ளது.

இதுவரையில் இலங்கையில் கொரோனாத் தொற்றால் 34 ஆயிரத்து 121 பேர் பாதிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## வடக்கில் கொரோனா .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

வெளியிடங்களில் இருந்து வருபவர்கள் தொடர்பான தகவல்களை, சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு மக்கள் வழங்கத் தவறியமையே கொரோனாத் தொற்றுப் பரவலுக்குக் காரணம்.

மருதனார்மடம் தொற்று நிலைமை தொடர்பில் 500 குடும்பங்கள் வரை தனிமைப்படுத்தப்பட்டுள்ளன.

தொற்றாளர்களுடன் தொடர்புடையவர்களைக் கண்டறியும் நடவடிக்கைகளை சுகாதாரப் பிரிவினர் ஆரம்பித்துள்ளனர்.

தொற்றாளர்களுடன் தொடர்புடையவர்களை இனங்காணும் வரை, தொற்று சமூகப் பரவலாக உருமாறுவதைத் தடுக்கும் நோக்கில், தொற்றாளர்கள் அதிகமாகவுள்ள இடங்களில் பாடசாலைகள் மூடப்பட்டுள்ளன.

ஏற்கனவே பொதுமக்களுக்கு ஓர் அறிவித்தலை வழங்கியிருந்தேன். வெளியிடங்களிலிருந்து யாராவது உங்கள் பிரதேசங்களுக்கு வந்தால் அது தொடர்பில் சுகாதாரப் பிரிவுக்கு அறிவிக்குமாறு.

ஆனால், இந்த அறிவிப்பு தொடர்பில் பொதுமக்கள் எமக்கு ஒத்துழையாமையே இன்று தொற்றுப் பரவுவதற்கு ஏதுவாகிவிட்டது.

வடக்கில் இன்னமும் கொரோனா கொத்தணிகள் உருவாகவில்லை. ஆகவே, மக்கள் சுகாதார வழிகாட்டல்களைப் பின்பற்றி, தொற்றிலிருந்து தம்மையும், சமூகத்தையும் பாதுகாத்துக்கொள்ள வேண்டும். - என்றார்.

## 2021 மார்ச் மாதத்துக் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மாகாண சபைத் தேர்தலை நடத்தும் முறைமை குறித்து நீண்டகாலமாக கருத்தாடல்கள் இடம்பெற்று வருகின்றன. தேர்தல் முறைமை மாற்றம் என்ற போர்வையில் கடந்த ஆட்சியின்போது மாகாண சபைகளுக்கான தேர்தல் ஒத்திவைக்கப்பட்டது. தேர்தலை எதிர்கொள்வதற்கு ஏற்பட்ட அச்சத்தாலேயே எல்லை நிர்ணயம், பெண் பிரதிநிதித்துவம் உட்பட பல விடயங்களை ஆயுதமாகப் பயன்படுத்தி திட்டமிட்ட அடிப்படையில் அது பிற்போடப்பட்டது.

இந்தநிலையில் இவ்வாரம் நடைபெற்ற அமைச்சரவைக் கூட்டத்திலும் மாகாண சபைத் தேர்தல் தொடர்பில் விரிவாக ஆராயப்பட்டது. இதன்படி விரைவில் கட்சித் தலைவர்கள் கூட்டத்தை நடத்துவதற்கு முடிவெடுக்கப்பட்டது. கட்சி தலைவர்களுடன் நடைபெறும் கலந்துரையாடலின் பின்னர் எட்டப்படும் இணக்கப்பாட்டின் அடிப்படையில் மீண்டும் அமைச்சரவைபத்திரமொன்றை முன்வைப்பதற்கு முடிவெடுக்கப்பட்டுள்ளது. அவ்வாறு முன்வைக்கப்படும் யோசனை குறித்து அமைச்சரவையும் ஆராய்ந்த பின்னர் இறுதி முடிவு எடுக்கப்படும்.

தேர்தல் முறைமை பற்றி ஆராயவேண்டும் என்பதனால் கட்சித் தலைவர்கள் கூட்டத்தை நடத்தி முடிவெடுப்பதே சிறப்பானதாக இருக்கும். நல்லாட்சி என்பதே தேர்தலை பிற்போடவே மூன்றிலிரண்டு பெரும்பான்மையை பயன்படுத்தியது. ஆனால் மக்களின் ஜனநாயக உரிமையை உறுதிப்படுத்துவதற்கே நாம் எதிர்ப்பார்க்கின்றோம்.

அந்தவகையில் மார்ச் மாதத்துக்கு முன்னர் தேர்தலை நடத்துவதற்கு எதிர்ப்பார்க்கின்றோம். அதனை அடிப்படையாகக்கொண்டே பேச்சுகள் இடம்பெற்றன - என்றார்.

## யாழ்ப்பாணம் மாநகர .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யாழ்ப்பாணம் மாநகர சபையின் 2021ஆம் ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டம், மாநகர மேயர் இம்மானுவேல் ஆனோல்ட்டால் கடந்த 2 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டிருந்தது.

அந்தச் சமர்ப்பணத்தின்போது, அதற்கு ஆதரவாக 19 வாக்குகளும், எதிராக 24 வாக்குகளும் அளிக்கப்பட்டு முதலாவது வாசிப்பு தோற்கடிக்கப்பட்டிருந்தது.

இந்தநிலையில், யாழ். மாநகர மேயர் இம்மானுவேல் ஆனால்ட் தலைமையில் இன்று காலை இடம்பெற்ற விசேட பொதுக் கூட்டத்தில் வரவு - செலவுத் திட்டத்தின் இரண்டாவது வாசிப்பு இடம்பெற்றது.

இதன்போது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் 16 உறுப்பினர்களும், ஐக்கிய தேசியக் கட்சியின் 03 உறுப்பினர்களும், தமிழர் விடுதலைக் கூட்டணியின் உறுப்பினர் ஒருவரும், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் உறுப்பினர் ஒருவரும் வரவு - செலவுத் திட்டத்திக்கு ஆதரவாக வாக்களித்தனர்.

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் 13 உறுப்பினர்களும், ஈழமக்கள் ஜனநாயகக் கட்சியின் 10 உறுப்பினர்களும், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் உறுப்பினர் ஒருவரும் வரவு - செலவுத் திட்டத்திக்கு எதிராக வாக்களித்தனர்.

அடுத்த ஆண்டுக்கான வரவு - செலவுத் திட்டம் இரண்டாவது தடவையாகவும் தோல்வியடைந்ததமையால் மேயர் பதவியை இழக்க வேண்டிய நிலைமை ஆனோல்ட்டுக்கு ஏற்பட்டுள்ளது.

## செட்டிகுளம் பிரதேச .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வாக்கெடுப்புக்கு விடப்பட்டு தோல்வி அடைந்திருந்தது. தமிழ்த் தேசியக் கட்சிகள் ஒன்றிணைந்து வரவு - செலவுத் திட்டத்தை தோற்கடித்திருந்தன.

இந்தநிலையில், புதிய தவிசாளருக்கான வாக்கெடுப்பு வடக்கு மாகாண உள்ளூராட்சி ஆணையாளர் பற்றிக் நிரஞ்சன் தலைமையில் இன்று இடம்பெற்றது.

இதன்போது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சார்பில் சு.ஜெகதீஸ்வரனும், ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி சார்பில் ஏற்கனவே தவிசாளராகப் பதவி வகித்த ஆ.அந்தோணியின் பெயரும் முன்மொழியப்பட்டது.

தெரிவுக்கான வாக்கெடுப்பில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சு.ஜெகதீஸ்வரன் 10 வாக்குகளைப் பெற்று தவிசாளராகத் தெரிவுசெய்யப்பட்டார்.

அவருக்கு ஆதரவாகக் கூட்டமைப்பின் 5 உறுப்பினர்களும், ஈ.பி.ஆர்.எல்.எவ்வின் 3 உறுப்பினர்களும், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் ஓர் உறுப்பினரும், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் ஓர் உறுப்பினரும் என 10 உறுப்பினர்கள் வாக்களித்திருந்தனர்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் வேட்பாளரான ஆ.அந்தோணி 6 வாக்குகளை மாத்திரம் பெற்று தோல்வியடைந்தார். அவருக்கு ஆதரவாக அந்தக் கட்சியின் 4 உறுப்பினர்களும், ஐக்கிய தேசியக் கட்சியின் 2 உறுப்பினர்களும் வாக்களித்தனர்.

ஸ்ரீலங்கா பொதுஜன முன்னணியின் ஓர் உறுப்பினர் நடுநிலைமை வகித்திருந்தார்.

இந்தநிலையில், மூன்று வருடங்களின் பின்னர் தமிழ்த் தேசியக் கட்சிகளின் ஒன்றிணைவால் செட்டிகுளம் பிரதேச சபையின் புதிய தவிசாளராக சு.ஜெகதீஸ்வரன் தெரிவுசெய்யப்பட்டார். (100)

## ஜனாஸா எரிப்புக்கு ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கோரி வடக்கு, கிழக்கு ஒருங்கிணைப்புக் குழுவின் ஏற்பாட்டில் பூநகரி பிரதேச செயலகத்துக்கு முன்னால் கவனயீர்ப்புப் போராட்டம் இன்று முன்னெடுக்கப்பட்டது.

காலை 10 மணியளவில் இடம்பெற்ற இந்தப் போராட்டத்தில் இந்து, கிறிஸ்தவ, இஸ்லாமிய மதங்களைச் சேர்ந்தவர்கள் சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றி போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இதைத் தொடர்ந்து பூநகரி பிரதேச செயலகம் முன்பாகக் கவனயீர்ப்புப் பதாதை காட்சிப்படுத்தப்பட்டது.

உலக நாடுகளில் அனுமதிக்கப்பட்டுள்ளது போன்று இஸ்லாமிய மத முறைமைக்கு எதிராக ஜனாஸாக்களை எரிக்க வேண்டாம் எனவும், மத அனுஷ்டானங்களுக்கு ஏற்ற வகையில் அதனை அடக்கம் செய்வதற்கு அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் எனவும் போராட்டக்காரர்கள் கோரினர்.

வடக்கு, கிழக்கு மாகாணங்களில் உள்ள 8 மாவட்டங்களிலும் இந்தக் கவனயீர்ப்பு போராட்டம் இடம்பெறுகின்றமை குறிப்பிடத்தக்கது.

## மருதனார்மடம் கொத் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மாதிரிகள் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டன. இதில் 8 பேருக்கு தொற்று உறுதி செய்யப்பட்டது.

சங்கானையைச் 4 பேரும், உடுவில், பண்டத்தரிப்பு, மானிப்பாய் மற்றும் வடலியடைப்பு ஆகிய பகுதிகளைச் சேர்ந்த தலா ஒருவரும் தொற்றாளர்களாக அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

இதன்மூலம் மருதனார்மடம் பொதுச் சந்தை கொரோனா கொத்தணி தொற்றாளர்கள் எண்ணிக்கை 66 ஆக அதிகரித்துள்ளது.

## கோட்டாவும் சவேந்திர .....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பொறுப்புக்கூற வேண்டியவர்கள்.

- இவ்வாறு சர்வதேச உண்மைக்கும் நீதிக்குமான திட்டம் அறிவித்துள்ளது.

காணாமல்போனவர்கள் பற்றிய அலுவலகத்தால் வெளியிடப்பட்ட அறிக்கையின்படி இறுதிக்கட்டப் போரில் 330 தமிழர்களும், 1989 இன் இறுதிக் காலாண்டுப் பகுதியில் 154 சிங்களவர்களும் காணாமல்போயுள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இருப்பினும் காணாமல்போனவர்கள் பற்றிய இந்த அலுவலகத்தின் அறிக்கையில் பெரியளவில் குறைத்து மதிப்பிடப்பட்டுள்ளன என்றும் சர்வதேச உண்மைக்கும் நீதிக்குமான திட்டம் சுட்டிக்காட்டியுள்ளது.

மேலும் தமது அன்புக்குரியவர்களுக்கு என்ன நடந்தது, எங்கு இருக்கின்றார்கள் என்ற உண்மையைக் கண்டறிவதற்கான உரிமை குடும்பங்களுக்கு உண்டு எனக் குறித்த அமைப்பின் நிறைவேற்றுப் பணிப்பாளர் ஜஸ்மின் சூக்கா தெரிவித்துள்ளார்.

அத்துடன் வலிந்து காணாமல்போதல் என்பது ஒரு குற்றம் என்பதால் இறுதிப் போரில் கட்டளைப் பொறுப்பில் இருந்த இராணுவ அதிகாரிகளுக்கும் யாருடைய பொறுப்பில் கீழ் அவர்கள் சரணடைந்தார்களோ அந்த அதிகாரிகளுக்கும் சரணடைந்த நூற்றுக்கணக்கான தமிழர்களை எவ்வாறு தொலைந்து போக விட்டார்கள் என்பதைப் பற்றி விளக்கம் தருவதற்கான சட்ட ரீதியான கடப்பாடு உண்டு என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

மேலும், 1989 இல் ஜனாதிபதி பொறுப்பாக இருந்தபோது மாத்தளையில் இருந்து பல சிங்கள இளைஞர்கள் ஏன் காணாமல் போனார்கள் என்பதை ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ இலங்கை மக்களுக்கு விளக்கமளிக்கப் போகின்றாரா என்றும் ஜஸ்மின் சூக்கா கேள்வியெழுப்பியுள்ளார்.

அத்தோடு அரசின் இந்தக் காணாமல்போனவர்களின் பட்டியல்கள் இலங்கையின் இராணுவத் தளபதி சவேந்திர சில்வாவுக்கு எதிராக வழக்குத் தொடர முடியும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதேவேளை, பதவியில் இருந்த வெளியேறிச் சென்ற பின்னர் ஒரு நாள் ஜனாதிபதிக்கு எதிராகவும் வழக்குத் தொடர முடியும் என்பதையும் காணாமல் போனவர்களின் பட்டியல்கள் காட்டுகின்றன என்றும் ஜஸ்மின் சூக்கா சுட்டிக்காட்டியுள்ளார்.

## சமூகத் தொற்றை ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

கொரோனா வைரஸ் உலகத்தில் பரவி வரும் புதிய வைரஸ் என்பதால், அதனை எதிர்கொள்ளும் நோய் எதிர்ப்பு சக்தி மனிதர்களிடம் இல்லை.

இந்த வைரஸ் இலங்கையில் சமூகம் முழுவதும் பரவி உள்ளது என்பதை ஏற்றுக்கொள்ள சிலர் விரும்பவில்லை. எனினும், உண்மையை எதிர்கொண்டு, அதனைக் கட்டுப்படுத்த வேண்டும்.

கொரோனா வைரஸ் தொற்றியவர்களில் 80 வீதமானவர்களுக்கு எந்த நோய் அறிகுறிகளும் தென்படுவதில்லை என்பது உறுதியாகி இருக்கின்றது - என்றார்.

## நாட்டை முழுமையாக ......

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

- இவ்வாறு இராணுவத் தளபதியும் கொரோனாத் தடுப்புக்கான தேசிய செயற்பாட்டு மையத்தின் தலைவருமான லெப்டினன்ட் ஜெனரல் சவேந்திர சில்வா ஊடகம் ஒன்றுக்கு தெரிவித்தார்.

ஆனால், தற்போதுள்ள நிலை தொடர்ந்தால், எந்தவிதமான கட்டுப்பாடுகளும் விதிக்கப்பட மாட்டாது எனவும் அவர் குறிப்பிட்டார்.

இது எல்லாம் மக்களின் கைகளில் உள்ளது. அடுத்த ஏழு நாள்கள் அவகாசம். அதில் அவர்கள் எவ்வாறு நடந்துகொள்கிறார்கள் என்பதைப் பொறுத்தது எனவும் அவர் சுட்டிக்காட்டினார்.

கொழும்பில் தற்போதுள்ள கொரோனா நிலைமை குறித்து அவர் கூறுகையில்-

சில பகுதிகள் கடுமையான முன்னேற்றத்தைக் காட்டியுள்ளன. தனிமைப்படுத்தப்பட்ட 13 வீட்டுத் திட்டங்களில், 10 வீடமைப்புத் திட்டங்கள் இந்த வாரம் விடுவிக்கப்பட்டன. அனைத்து முக்கிய கொத்தணிகளையும் கட்டுப்படுத்த முடிந்தது.

அதிகமான கொத்தணிகள் உருவாகாமல் தடுக்க அனைத்து சுகாதார வழிகாட்டுதல்களையும் பராமரிக்க பொது உதவி வேண்டும்.

தினசரி அதிக எண்ணிக்கையிலான நோயாளிகளைக் கொழும்பு தொடர்ந்து பதிவு செய்து வருகின்றது. - என்றார்.

## திருநெல்வேலி பொதுச் ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பரிசோதனைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

அதில் ஓர் அங்கமாகவே இன்று நல்லூர் சுகாதார வைத்திய அதிகாரி பிரிவில் உள்ள திருநெல்வேலி பொதுச்சந்தை வியாபாரிகளின் மாதிரிகள் பெறப்பட்டுள்ளன. இதன் முடிவுகள் இன்றிரவு அல்லது நாளை வெளியாகும் என அறிவிக்கப்பட்டுள்ளது.









நமது பார்வை
உண்மை - நேர்மை - பக்கம் சாராமை
ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம் மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
தொலைபேசி - 021 222 3000 இணையம் - onlinekathir.com

# மாகாண சபைகளுக்கான தேர்தல்களை இனியும் தாமதிக்காமல் நடத்துங்கள்!

*"தேசிய இனப் பிரச்சினைக்கான அரசியல் தீர்வாகவே மாகாண சபை முறைமை முன்வைக்கப்பட்டது. எனவே அதற்கான தேர்தல் வெகுவிரைவில் நடத்தப்பட வேண்டும்."*

– இவ்வாறு ஐக்கிய மக்கள் சக்தியின் தேசிய அமைப்பாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான திஸ்ஸ அத்தநாயக்கா கூறியிருக்கின்றார்.

அந்தக் கட்சியில் இந்தக் கருத்தை திஸ்ஸ அத்தநாயக்கா கூறுவதில் அர்த்தம் உண்டு. அங்கு பிற எம்.பிக்கள் இப்படிக் கூறுவதற்குத் தகைமையற்றவர்கள் என்பது கவனிக்கப்பட வேண்டும்.

தற்போதைய ஐக்கிய மக்கள் சக்தியினர், கடந்த பொதுத் தேர்தலுக்கு முன்னர் அப்போது ஆட்சியைக் கொண்டு நடத்திய நல்லாட்சி அரசின் பிரதான பங்காளராக இருந்த ஐக்கிய தேசியக் கட்சியினரே.

மாகாண சபைத் தேர்தல்களை உரிய காலத்தில் நடத்த முடியாத இக் கட்டை ஏற்படுத்தி, அத்தேர்தல்கள் உரிய சமயத்தில் நடத்தப்படாமல் இழுபட விட்டமைக்கு பிரதான காரணகர்த்தாக்கள் – சூத்திரதாரிகள் – முன்னைய நல்லாட்சி அரசினரே.

*"வீடெரிக்கும் அரசனுக்கு கொள்ளி கொடுக்கும் மந்திரிகள்"* போல மாகாணத் தேர்தல்களை நடத்த அஞ்சி, தொடை நடுங்கியாகச் செயற்பட்ட ரணிலின் நல்லாட்சி அரசுக்கு நாடாளுமன்றத்தில் முண்டு கொடுத்து, அந்த அரசு கவிழாமல் காப்பாற்றி வந்த தமிழ்த் தேசியக் கூட்டமைப்பும் கூட, இந்த மாகாண சபைத் தேர்தல்கள் உரிய காலத்தில் நடத்தப்படாமல் இழுபட்டுப் போன குற்றத்துக்காகப் பொறுப்பேற்க வேண்டியதே.

மாகாண சபைத் தேர்தல்கள் அறிவிக்கப்பட வேண்டிய சமயத்தில், அத் தேர்தல்கள் நடத்தப்படும் முறைமை தொடர்பான ஏற்பாடுகளை மாற்றியமைக்கப் போகின்றோம் என்று தெரிவித்து, இருக்கின்ற சட்டங்களை இயலாமலாக்கியது நல்லாட்சி அரசு.

அடுத்த ஒரு வருட காலத்துக்குள் உரிய சட்டங்களை நிறைவேற்றி, அச்சட்டங்களின் கீழ் தேர்தல்களை நடத்துவோம் என்றும் அது பகிரங்கமாக உறுதி மொழி அளித்தது. ஆனால் வருடங்கள் கடந்தும், அந்த அரசின் நான்கரை ஆண்டுப் பதவிக் காலம் முடிவடையும் வரை – அந்த நாடாளுமன்றத்தை ஜனாதிபதி கலைக்கும் வரை – அத் தேர்தல்களை நடத்தத் தேவையான சட்ட விதிகளைப் புதிதாக உருவாக்குவதற்கு நல்லாட்சி அரசு காத்திரமான – சாத்தியமான – எந்த நடவடிக்கையையும் முன்னெடுக்கவே இல்லை.

மாகாண சபைத் தேர்தலை நடத்தினால், தங்களின் மக்கள் செல்வாக்குப் பற்றிய "பொட்டுக்கேடு" வெளிவந்து விடும் என்ற அச்சத்தில் – அப்போது திடீர் விஸ்வரூபம் எடுத்து வளர்ந்து வந்த மொட்டுக் கட்சியின் மக்கள் ஆதரவு வெளித்தெரிந்து விடும் என்ற பீதியில் – அந்தத் தேர்தலை நடத்த எதுவுமே செய்யாமல் இழுத்தடித்தது, இன்றைய ஐக்கிய மக்கள் சக்தியையும் உள்ளடக்கிய அப்போதைய நல்லாட்சி அரசு.

இப்போது ஆட்சி அதிகாரம், செல்வாக்கு எல்லாம் இழந்து எதிரணியில் போய் இருந்ததும், அந்தத் தேர்தலிலாவது ஏதேனும் செல்வாக்கு மீளத் துளிர் பெற்று விடாதா என்ற எதிர்பார்ப்பில் – நப்பாசையில் – அத்தேர்தலை நடத்தும்படி அது வலியுறுத்துகின்றது. அவ்வளவே.

தான் ஆட்சியில் இருந்தபோது செய்யாதவற்றை – செய்ய மறந்தவற்றை – எதிர்த்தரப்பின் ஆட்சியின் நடத்துமாறு அது வற்புறுத்துகின்றது.

அத்தேர்தலை நடத்துவதற்கு வலியுறுத்தும் ஐக்கிய மக்கள் சக்தியினர், தேசிய இனப் பிரச்சினைக்கான அரசியல் தீர்வாக முன்வைக்கப்பட்டதே மாகாண சபை முறைமைதான் என்று சுட்டிக்காட்டுகின்றனர். அதனால்தான் அதற்கான தேர்தல்கள் வெகு விரைவில் நடத்தப்பட வேண்டும் என இப்போது வலியுறுத்துகின்றது ஐக்கிய மக்கள் சக்தி.

அத்தகைய முக்கியத்துவம் வாய்ந்த தேர்தலைத்தான் நல்லாட்சி அரசில் தாங்களும் பிரதான பங்காளிகளாக இருந்த போது ஐக்கிய மக்கள் சக்தியினரால் நடத்த முடியவில்லை. நடத்த முயலவில்லை என்பதை விட நடத்த விடாமல் இழுபடப் பண்ணினார்கள் என்பதே உண்மை.

அப்படி அந்தத் தேர்தல் நடத்தப்படாமல் இழுபட்டுப் போனமைக்கு இன்று ஐக்கிய மக்கள் சக்தியில் அங்கம் வகிக்கும்– அன்று நல்லாட்சி அரசில் இடம்பெற்றிருந்த – ஒவ்வொருவரும் பொறுப்பு.

எனினும், அன்றைய நல்லாட்சி அரசில் இடம்பெறாதவர் – அந்த அரசுடன் சம்பந்தப்படாதவர் – என்ற வரையில் இந்த விடயங்களை இப்போதைய ஐக்கிய மக்கள் சக்தியில் இருக்கும் திஸ்ஸ அத்தநாயக்கா கூற முடியும். ஏனையோர் கூற முடியாது.

தேசிய இனப் பிரச்சினைக்குத் தீர்வாக முன்வைக்கப்பட்டது மாகாணசபை முறைமை என்பதால் அத் தேர்தல் முக்கியமானது என்று திஸ்ஸ அத்தநாயக்கா கூறினாலும் –

தேசிய இனப் பிரச்சினையில் பெரிதும் சம்பந்தப்பட்டு, அப்பிரச்சினையால் பாதிக்கப்பட்டு, அதற்கான தீர்வை எதிர்நோக்கியிருக்கும் தமிழர் தரப்பும் கூட இன்னும், நடத்தப்படாமல் இருக்கும் மாகாண சபைத் தேர்தல்களை காலம் தாழ்த்தாமல் நடத்துங்கள் என்று ஒன்றுபட்டு குரல் எழுப்பவில்லை; வற்புறுத்தவில்லை.

அந்த வகையில் பார்த்தால் திஸ்ஸ அத்தநாயக்காவின் கருத்து தனித்துவமானது; வரவேற்கத்தக்கது.

# மாகாண சபைக்கான தேர்தலை எதிர்கொள்ள சஜித் அணி தயார்

## திஸ்ஸ அத்தநாயக்க எம்.பி. அறிவிப்பு



தேசிய இனப்பிரச்சினைக்கான அரசியல் தீர்வாகவே மாகாண சபை முறைமை முன்வைக்கப்பட்டது. எனவே, அதற்கான தேர்தல் வெகுவிரைவில் நடத்தப்பட வேண்டும். அதனை எதிர்கொள்வதற்குப் பிரதான எதிர்க்கட்சி என்ற வகையில் நாம் தயார்.

– இவ்வாறு ஐக்கிய மக்கள் சக்தியின் தேசிய அமைப்பாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான திஸ்ஸ அத்தநாயக்க தெரிவித்தார்

மாகாண சபைத் தேர்தல் தொடர்பாக கருத்து வெளியிடுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:–

மாகாணசபைத்தேர்தல்என்பது அரசமைப்பு ஊடாக மக்களுக்கு வழங்கப்பட்ட உரிமையாகும். எனினும், அந்தத் தேர்தல் நீண்ட காலமாக நடைபெறாமல் ஆட்சி அதிகாரம் ஆளுநர்கள் வசம் சென்றுள்ளது. இந்த நிலைமை நீடிக்கக்கூடாது.

மாகாண சபைத் தேர்தல் முறைமை தொடர்பில் நாடாளுமன்றம் இன்னும் உரிய அனுமதி வழங்காததால் தேர்தலை நடத்த முடியாத சூழ்நிலை ஏற்பட்டுள்ளது. ஆகவே, தேர்தலை நடத்துவதற்கான சட்ட திருத்தத்தை அரசு உடன் நாடாளுமன்றத்தில் முன்வைக்க வேண்டும். பழைய முறைமையில் தேர்தலை நடத்துவதற்கு நாம் எதிர்ப்பு இல்லை.

எனவே, பழைய முறைமையில் மாகாண சபைத் தேர்தலை நடத்தி விட்டு அடுத்து வரும் காலப்பகுதியில் எந்த முறைமையில் தேர்தலை நடத்தலாம் என்பது பற்றிப் பரிசீலிக்கலாம். அந்தவகையில் தேர்தல் விரைவில் நடத்தப்பட வேண்டும். அதனை எதிர்கொள்வதற்கு நாம் தயார் – என்றார்.

# வாள்வெட்டுச் சம்பவங்களுடன் தொடர்புடைய சந்தேக நபர் ஓமந்தையில் வைத்துக் கைது!





யாழ்ப்பாணம், நவ.16

யாழ்ப்பாணத்தில் பல்வேறு வாள்வெட்டு வன்முறைச் சம்பவங்களை நடத்திவிட்டு தலைமறைவாகியிருந்த சுமன் என்று அழைக்கப்படும் சந்தேகநபர் ஓமந்தையில் வைத்துக் கைது செய்யப்பட்டுள்ளார்.

யாழ்ப்பாணம் மாவட்ட குற்றத் தடுப்புப் பொலிஸ் பிரிவினரால் இந்தக் கைது நடவடிக்கை நேற்று (செவ்வாய்க்கிழமை) முன்னெடுக்கப்பட்டது.

கடந்த செப்ரெம்பர் 26 ஆம் திகதி யாழ்ப்பாணம் பெருமாள் கோயிலடியில் வைத்து தனுரொக் என்ற மானிப்பாய் இளைஞனை வாளால் வெட்டி கொலை முயற்சி செய்தமை, நீர்வேலியில் உள்ள தனுரொக்கின் நண்பனின் வீடு புகுந்து இளைஞனையும் தாயாரையும் தாக்கியமை, கச்சேரியில் ஊழியர் ஒருவரை வெட்டிக் காயப்படுத்தியமை உள்ளிட்ட பல வாள்வெட்டு வன்முறைகளுடன் பிரதான சந்தேகநபராக சுமன் யாழ்ப்பாணம் பொலிஸாரால் தேடப்பட்டு வந்தார்.

இந்நிலையில், நேற்று கைதுசெய்யப்பட்ட சந்தேகநபர், பணத்துக்காக வாள்வெட்டு வன்முறைகளில் தான் ஈடுபட்டார் என விசாரணையில் தெரிவித்துள்ளார்.

அத்துடன், சந்தேகநபரால் யாழ்ப்பாணத்தில் மறைத்து வைக்கப்பட்டிருந்த வாள்கள் மற்றும் கைக்குண்டு என்பன கைப்பற்றப்பட்டுள்ளன என்று பொலிஸார் தெரிவித்தனர்.

யாழ்ப்பாணம் மூத்த பொலிஸ் அத்தியட்சகரின் கீழான பிரதான பொலிஸ் பரிசோதகர் நிகால் பிரான்ஸிஸ் தலைமையிலான மாவட்ட குற்றத் தடுப்பு பொலிஸ் பிரிவினரால் சந்தேக நபர் தேடப்பட்டு வந்த நிலையில் ஓமந்தையில் தலைமறைவாகியிருந்தமை தொலைபேசி உரையாடலின் மூலம் கண்டறியப்பட்டுள்ளது.

அதனடிப்படையில் கைது செய்யப்பட்ட சந்தேக நபர், தற்போது யாழ்ப்பாணத்தில் தடுத்து வைத்து விசாரிக்கப்படுகின்றார். அவர் யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றில் முற்படுத்தப்படுவார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

# பல்கலை மருத்துவ அதிகாரியாக வைத்தியர் சத்தியலிங்கம் நியமனம்



**(ந.லோகதயாளன்)**

*யாழ்ப்பாணம்,டிச.16*

*யாழ்ப்பாணம் பல்கலைக் கழக மருத்துவ அதிகாரியாக வடக்கு மாகாண சபையின் முன்னாள் சுகாதார அமைச்சர் ப.சத்தியலிங்கம் நியமனம் பெறுகின்றார்.*

*யாழ்ப்பாணம் பல்கலைக் கழகத்தின் வவு னியா வளாக மருத்துவ அதிகாரி பணிநிலை வெற்றிடமாகவுள்ளது. இந்த வெற்றிடத்திற்கு கோரப்பட்ட விண்ணப்பத்திற்கு சத்தியலிங்கம் விண்ணப்பித்துள்ளார்.*

*விண்ணப்பித்தவர்களில் அவரே தகுதியானவர் எனக் கண்டு நியமனக் கடிதம் வழங்கப்படுகின்றது. எதிர்வரும் ஜனவரி மாதம் முதலாம் திகதியில் இருந்து அவர் கடமையைப் பொறுப்பேற்கலாம எனத் தெரிவிக்கப்படுகின்றது.*

*இலங்கை தமிழ் அரசுக் கட்சியின் பதில் பொதுச் செயலாளராகவும் சத்தியலிங்கம் உள்ளமை குறிப்பிடத்தக்கது.*

சமூக நல அறிவிப்பு

# கொரோனாவில் இருந்து எம்மைப் பாதுகாப்போம்!



**கொரோனா எனப்படும் கொவிட்- 19 வைரஸ் பாதிப்பு குறித்த விழிப்புணர்வு இன்னும் தேவைப்படுகிறது.**

இந்த வைரஸ் வருவதற்கு முன்பும் வந்த பின்பும் என்னென்ன தடுப்பு முறைகள் சரியானவை என்பது பற்றி நாம் கட்டாயம் தெரிந்திருக்க வேண்டும். இவை நிச்சயம் உங்கள் அச்சத்தை போக்கும் என்பதோடு உங்களை பாதுகாப்பாக வைத்திருக்கவும் உதவும்.

- கொரோனா தொற்று ஏற்படாத வண்ணம் மக்கள் தங்களைக் கவனமாகப் பாதுகாத்துத் தங்கள் வேலைகளைத் தொடரும்படியான அவசியம் ஏற்பட்டுள்ளது. அதற்கு மனதளவில் நாம் நம்மைத் தயார்படுத்திக் கொள்ள வேண்டும்.
- அறிவுரைகளையும் பாதுகாப்பு நெறிமுறைகளையும் சட்டை செய்யாமல் தங்கள் விருப்பம் போல சுற்றித் திரிவது, கட்டித் தழுவுவது போன்றவற்றை தவிர்க்க வேண்டும்.
- சானிடைசர் இருக்கும் இடத்தில் எல்லாம் அதைப் பயன்படுத்த வேண்டும். வீட்டிற்கு வந்தவுடன், சோப் கொண்டு கை கழுவ வேண்டும்.
- மக்கள் நெருக்கம் நிறைந்த இடங்களில் - குறிப்பாக கட்டடங்களுக்குள் இருக்கும் கூட்டங்களுக்கு - போகாமல் தவிர்க்க வேண்டும்.

**இந்த நான்கு நெறிமுறைகளையும் தவறாமல் முழு ஈடுபாட்டுடன் கடைப்பிடிப்பதன் மூலம், தொற்று ஏற்படாமல் நிச்சயமாக தவிர்க்க முடியும்.**

**சமூக அக்கறையுடன் - கொரோனா தொடர்பான விழிப்புணர்வுத் தகவல்களை உங்களுக்கு வழங்க இன்று அனுசரணை வழங்குகின்றனர்:-**




# பிலிப்பைன்ஸில் நிலநடுக்கம்




மணிலா,டிசெ.16

பிலிப்பைன்ஸ் நாட்டில் நிலநடுக்கம் ஏற்பட்டுள்ளது. ரிச்டர் அளவில் 6.3 ஆக பதிவாகி உள்ளது.

பிலிப்பைன்ஸில் சக்திவாய்ந்த நில நடுக்கம் ஏற்பட்டது. இந்த நிலநடுக்கம் ரிச்டர் அளவுகோலில் 6.3 ஆகப் பதிவாகியது. இந்த நிலநடுக்கத்தின் மையம் மைண்டானாவோ நகரிலிருந்து 10 கிலோ மீற்றர் ஆழத்தில் ஏற்பட்டது.

இந்த நிலநடுக்கத்தால் இதுவரை உயிர்சேதமோ அல்லது பொருள் சேதமோ இதுவரை எதுவும் பதிவாகவில்லை என தகவல்கள் தெரிவிக்கின்றன.

ஜப்பானில் இருந்து தென்கிழக்கு ஆசியா வழியாகவும் பசிபிக் படுகை முழுவதும் பரவியிருக்கும் 'தீவிர நில அதிர்வு விளைவுகளின் வளைவு' என அழைக்கப்படும் பசிபிக் 'ரிங் ஓவ் ஃபயர்' இன் ஒரு பகுதி பிலிப்பைன்ஸின் சிறு பகுதியையும் உள்ளடக்கி உள்ளது.

இதன் காரணமாக பிலிப்பைன்ஸ் மற்றும் இந்தோனேசியாவில் அவ்வப்போது தொடர் நிலநடுக்கங்களும், நில அதிர்வுகளும், சுனாமி பாதிப்புகளும் ஏற்படுகின்றன.

# சந்திரனில் எடுத்த பாறைகளுடன் பூமி திரும்புகிறது சீன விண்கலம்



சீனாவில் இருந்து நிலவுக்கு அனுப்பப்பட்ட விண்கலம் அங்கு எடுக்கப்பட்ட பாறைகளுடன் பூமிக்கு திரும்பி வருகிறது.

நிலவில் இருந்து கற்கள், பாறைகளை பூமிக்கு எடுத்து வந்து ஆய்வு செய்வதற்காக சீனாவில் இருந்து கடந்த மாதம் 24 ஆம் திகதி ஒரு விண்கலம் அனுப்பப்பட்டது.

'சாங்கி – 5' என்ற இந்த விண்கலத்தில் இருந்து பிரிந்த தரையிறங்கு கலம் கடந்த முதலாம் திகதி நிலவில் பத்திரமாக தரை இறங்கியது. அங்கு ஏற்கனவே திட்டமிட்டபடி கற்கள், பாறைகள் போன்றவற்றைச் சேகரித்தது.

கடந்த 3 ஆம் திகதி இந்தக் கலம் நிலவுப் பரப்பில் இருந்து புறப்பட்டு, விண்கலத்துடன் கடந்த வாரம் வெற்றிகரமாக இணைக்கப்பட்டது. இதையடுத்து சீனாவின் விண்கலம் பூமியை நோக்கிய பயணத்தை தொடங்கி உள்ளது. விரைவில் இந்த விண்கலம் நிலவில் எடுக்கப்பட்ட பாறைகளுடன் பூமியை வந்தடைகிறது.

# ரஷ்யாவில் முதியோர் காப்பகம் சாம்பல் பதினொரு பேர் பேர் உடல் கருகிப் பலி



மொஸ்கோ,டிசெ.16

ரஷ்யாவில் முதியோர் காப்பகத்தில் பயங்கர தீ விபத்து ஏற்பட்டது. இதில் 11 பேர் உடல் கருகி பலியாகினர்.

ரஷ்யாவின் பாஷ்கோர்டோஸ்தான் பிராந்தியத்தில் உள்ள இஸ்புல்டினோ என்ற கிராமத்தில் முதியோர் காப்பகம் ஒன்று செயல்பட்டு வந்தது. மரத்தினால் ஆன கட்டடத்தில் இயங்கி வந்த இந்த காப்பகத்தில் முதியவர்கள் 15 பேர் தங்கியிருந்தனர்.

இந்தநிலையில் நேற்று முன்தினம் நள்ளிரவு இந்த காப்பகத்தில் திடீரெனத் தீப் பிடித்தது. மளமளவென பற்றி எரிந்த தீ கண்ணிமைக்கும் நேரத்தில் ஒட்டு மொத்த கட்டத்திலும் பரவியது.

இதனால் காப்பகத்தில் இருந்த முதியவர்கள் வெளியே வர முடியாமல் உள்ளே சிக்கிக் கொண்டனர். எனினும் காப்பக ஊழியர் உட்பட 4 பேர் அங்கிருந்து வெளியேறி உயிர் தப்பினர்.

அவர்கள் அளித்த தகவலின் பேரில் தீயணைப்பு வீரர்கள் சம்பவ இடத்துக்கு விரைந்து வந்து தீயை அணைத்தனர். ஆனால் அதற்குள் 4 மூதாட்டிகள் உட்பட 7 பேர் உடல் கருகி பரிதாபமாக உயிரிழந்தனர். தீ விபத்துக்கான காரணம் குறித்து பொலிஸார் விசாரணை நடத்தி வருகின்றனர்.

# அர்மீனியா – அஜர்பைஜான் பார் கைதிகள் பரிமாற்றம்

அர்மீனியா மற்றும் அஜர்பைஜான் நாடுகளுக்கு இடையே, ரஷ்யா முன்னிலையில் ஏற்பட்ட போர் நிறுத்தத்தைத் தொடர்ந்து –

தற்போது இரு நாடுகளும் அனைத்து போர் கைதிகளையும் பரஸ்பரம் பரிமாற்றிக் கொள்ள முன்வந்துள்ளன.

அதன் முதல் கட்டமாக, அஜர்பைஜான் சிறைகளில் இருந்த 44 அர்மீனியர்கள் விடுவிக்கப்பட்டு, ரஷ்யப் போர் விமானம் மூலம் அர்மீனியா வந்தடைந்தனர்.

மீண்டும் அதே விமானத்தில், அர்மீனியர்களால் கைது செய்யப்பட்ட 12 அஜர்பைஜான் நாட்டினர் தாயகம் திரும்பினர்.

# காபூல் நகரத் துணை ஆளுநர் குண்டு வெடிப்பில் உயிரிழப்பு

ஆப்கானிஸ்தான் தலைநகர் காபூலில் நடந்த குண்டு வெடிப்பில், துணை ஆளுநர் மொஹைபுல்லா மொஹமதி கொல்லப்பட்டார்.

காலையில் பணிக்கு சென்ற போது, அவரது காரில் முன்கூட்டியே பொருத்தப்பட்டிருந்த குண்டு வெடித்ததால், அவரும், அவரது செயலாளரும் சம்பவ இடத்திலேயே உயிரிழந்தனர்.

அரசுக்கும், தாலிபான் தீவிரவாதிகளுக்கும் கத்தாரில் அமைதிப் பேச்சுகள் தொடங்கியமை முதல், ஆப்கானிஸ்தானில் பயங்கரவாத தாக்குதல்கள் அதிகரித்துள்ளன.



# குருகுலம் தமிழ் மொழி ஒளிபரப்பு அட்டவணை

| 17.12.2020 | வியாழக்கிழமை |
|---|---|
| 04.00 - 04.55 | தரம் - 12 பொருளியல் (த) |
| 05.00 - 05.55 | தரம் - 13 பொருளியல் (த) |
| 06.00 - 06.55 | தரம் - 12 கணக்கீடு (த) |
| 08.00 - 08.55 | தரம் - 08<br>தமிழ் (த)(1ஆம், 2ஆம்)<br>தரம் - 08<br>வரலாறு (த)(2ஆம், 4ஆம்) |
| 09.00 - 09.55 | தரம் - 09<br>தமிழ் (த)(1ஆம், 2ஆம்)<br>தரம் - 09<br>வரலாறு (த)(1ஆம், 2ஆம்) |
| 10.00 - 10.55 | தரம் - 10 விஞ்ஞானம் (த) |
| 11.00 - 11.55 | தரம் - 11 விஞ்ஞானம் (த) |
| 12.00 - 12.55 | தரம் - 12 இணைந்த கணிதம் (த) |
| 13.00 - 13.55 | தரம் - 13 இணைந்த கணிதம் (த) |
| 14.00 - 14.55 | தரம் - 07<br>தமிழ் (த) (1ஆம், 2ஆம்)<br>தரம் - 07<br>வரலாறு (த) (2ஆம், 4ஆம்) |
| 15.00 - 15.55 | தரம் - 12 வணிகக்கல்வி (த) |
| 16.00 - 16.55 | தரம் - 13 வணிகக்கல்வி (த) |
| 17.00 - 17.55 | தரம் - 13 கணக்கீடு (த) |
| 18.00 - 18.55 | தரம் - 06<br>சிங்களம் (த) (1ஆம், 2ஆம்)<br>தரம் - 06<br>வரலாறு (த) (2ஆம், 4ஆம்) |
| 22.30 - 23.25 | தரம் - 12<br>விவசாய விஞ்ஞானம் (த) |
| 23.30 - 24.30 | தரம் - 13<br>விவசாய விஞ்ஞானம் (த) |

# கொரோனாப் பரவலை தடுக்க இங்கிலாந்தில் மீள் ஊடரங்கு

இங்கிலாந்தில் கொரோனா பரவலை தடுக்க மூன்றடுக்கு ஊரடங்கு அமல்படுத்தப்பட்டுள்ளது.

இதுகுறித்து செய்தியாளர்களிடம் பேசிய அந்நாட்டு சுகாதாரத்துறை அமைச்சர் மாட் ஹான்ஹாக்,லண்டன் மற்றும் தென்கிழக்கு பகுதிகளில் இன்று புதன்கிழமை முதல் 3 அடுக்கு கடுமையான கொரோனா கட்டுப்பாடுகள் விதிக்கப்படுவதாக கூறியுள்ளார்.

து, லண்டன், ஹெர்ட்போர்ட்ஷயர், எசெக்ஸ் மற்றும் சில பகுதிகளில் இந்தக் கட்டுப்பாடுகள் அமுலுக்கு வருமென அவர் குறிப்பிட்டுள்ளார்.

குறிப்பிட்டசேவைகளைத் தவிர்த்து விடுதிகள் மற்றும் உணவகங்கள் மூடப்படும் என்றும், 3 அடுக்கு ஊரடங்கை தொடர்ந்து மக்கள் தங்கள் வீட்டுக்கு வெளியேவோ அல்லது தனியார் தோட்டங்களிலோ அல்லது வெளிப்புற இடங்களிலோ கூடத் தடை விதிக்கப்படுவதாக அவர் தெரிவித்தார்.

# ஆறு வாரங்களுக்குப் பிறகு பைடனை வாழ்த்திய புடின்!

அமெரிக்க அதிபர் தேர்தலில் ஜோ பைடன் வெற்றி பெற்ற ஆறு வாரங்களுக்குப் பிறகு, ரஷ்ய அதிபர் புடின் அவருக்கு வாழ்த்து தெரிவித்துள்ளார்.

ஜோ பைடனின் வெற்றியை அதிபர் தேர்தல் குழுவினர் நேற்று அதிகாரப்பூர்வமாக உறுதி செய்தனர். பைடனுக்கு பல்வேறு நாடுகளின் தலைவர்கள் வாழ்த்து தெரிவித்தாலும், அதிகாரப்பூர்வ வெற்றி அறிவிப்புக்குப் பிறகே வாழ்த்து தெரிவிப்பது பொருத்தமானதாக இருக்கும் என புடின் கருதினார்.

இதை அடுத்து பைடனை வாழ்த்தி உள்ள அவர், பல கருத்து வேறுபாடுகள் இருந்தாலும், சர்வதேச பிரச்சனைகளுக்கு தீர்வு காண்பதில் ரஷ்யாவும், அமெரிக்காவும் இணைந்து செயல்படும் எனத் தெரிவித்துள்ளார்.



காலைக்கதிர் Kalaikkathir மாலைப்பதிப்பு



# சிறையில் உண்ணாவிரதமிருக்கும் முருகன் ஆஸ்பத்திரிக்கு மாற்றம்!

அடுக்கம்பாறை,டிசெ.16

முன்னாள் பிரதமர் ராஜீவ்காந்தி கொலை வழக்கில் தண்டனை பெற்ற முருகன் பொலிஸ் காவலுடன் அடுக்கம்பாறை அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக கொண்டு செல்லப்பட்டார்.

முருகன் வேலூர் சிறையில் காவலில் உள்ளார். இவர் செல்போன் 'வாட்ஸ் அப்'பில் தனது உறவினர்களுடன் பேச அனுமதி அளிக்க வேண்டும் என கடந்த மாதம் 23 ஆம் திகதியில் இருந்து உண்ணாவிரதம் இருந்து வருகிறார். நேற்று முன்தினம் அவரது உடல் மிகவும் சோர்வடைந்திருந்ததால் குளுக்கோஸ் ஏற்றப்பட்டது. எனினும் அவருக்கு உணவு வழங்க வேண்டும் என டாக்டர்கள் ஜெயில் அதிகாரிகளிடம் தெரிவித்தனர்.

இதையடுத்து சிறை அதிகாரிகள் முருகனிடம் பேச்சு நடத்தி கஞ்சி மட்டுமாவது குடிக்க வேண்டும் என கூறினர். அவர் மறுத்ததால் வலுக்கட்டாயமாக கஞ்சி குடிக்க வைத்தனர் எனக் கூறப்படுகிறது. நேற்றும் முருகன் 23 ஆவது நாளாக உண்ணாவிரதம் மேற்கொண்டார்.

இந்த நிலையில் மாலை 6 மணி அளவில் திடீரென முருகன் மிகவும் சோர்வடைந்தார். இதனால் அவரை பலத்த பொலிஸ் காவலுடன் அடுக்கம்பாறை அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்காக கொண்டு சென்றனர்.

அங்கு அவரை பரிசோதனை செய்த டாக்டர்கள் அவருக்கு ஈ.சி.ஜி.இரத்த அழுத்தம், இரத்தத்தில் சர்க்கரை அளவு போன்ற பரிசோதனைகளை செய்தனர். சுமார் ஒன்றரை மணி நேர பரிசோதனைக்கு பின்னர் மீண்டும் அவர் வேலூர் சிறைக்குக் கொண்டு செல்லப்பட்டு அடைக்கப்பட்டார்.

இந்த நிலையில் உடல் சோர்வாக இருந்ததால் மீண்டும் முருகன் இரவு 11 மணி அளவில் வேலூர் அடுக்கம்பாறை அரசு மருத்துவமனையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டார். அங்கு அவருக்கு சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது.

மருத்துவமனைக்கு அழைத்து வரப்பட்ட முருகன் உடல் மெலிந்து மிகவும் சோர்வடைந்த நிலையில் மெதுவாக நடந்து சென்றார். அவர் எப்போதும் காவி உடையில் சாமியார் போல் காணப்படுவார். ஆனால் மருத்துவமனைக்கு அழைத்து வந்தபோது அவர் கைதிகளுக்கான வெள்ளை நிற உடையை அணிந்திருந்தார்.

முருகனின் காவி உடையை வேண்டும் என்றே ஜெயில் அதிகாரிகள் பறித்து விட்டனர் என அவரது வக்கீல் புகழேந்தி குற்றம் சாட்டி இருந்தது குறிப்பிடத்தக்கது.

### இலங்கை கடற்படை நடவடிக்கையை ஆட்சேபித்து

# இராமேஸ்வரம் பகுதி மீனவர்கள் காலவரையற்ற வேலைநிறுத்தம்



இலங்கை கடற்படையால் மீனவர்கள் கைது செய்யப்பட்டமையைக் கண்டித்து இராமேஸ்வரம் மீனவர்கள் காலவரையற்ற வேலைநிறுத்தம் அறிவித்துள்ளனர்.

இராமேஸ்வரத்தைச் சேர்ந்த 4 விசைப்படகுகளுடன் 29 மீனவர்களை இலங்கை கடற்படையினர் நேற்று கைது செய்தனர். அதுதொடர்பான காட்சிகளை மீனவர்கள் சிலர் தங்களது செல்போன்களில் பதிவு செய்துள்ளனர்.

அதிநவீன ஆயுதங்கள் பொருத்தப்பட்ட ரோந்து கப்பல்களில் வந்த இலங்கை கடற்படையினர், தங்களை விரட்டியடித்தமையோடு, துப்பாக்கிமுனையில் கைது செய்ததாகவும் மீனவர்கள் தெரிவித்துள்ளனர்.

இரவோடு இரவாக மீன் பிடிக்காமல் கரை திரும்பியதால் பெரும் இழப்பு ஏற்பட்டுள்ளதாக மீனவர்கள் வேதனை தெரிவித்துள்ளனர். இதையடுத்து, மீனவர்களையும் படகுகளையும் இலங்கை அரசு விடுவிக்கும் வரை தொடர் வேலைநிறுத்தத்தில் ஈடுபட இராமேஸ்வரம் மீனவர்கள் முடிவு செய்துள்ளனர். சுமார் 800க்கும் மேற்பட்ட விசைப்படகுகள் கரையில் நங்கூரமிட்டு நிறுத்தப்பட்டுள்ளன.

# விண்வெளிக்குச் செல்வதற்கு இந்திய வம்சாவளி வீரர் தெரிவு



அடுத்த ஆண்டு சர்வதேசவிண்வெளிநிலையத்திற்கு செல்ல நாசா தேர்வு செய்துள்ள 3 விண்வெளி வீரர்களில் இந்திய வம்சாவளியினரான ராஜா சாரியும் இடம்பெற்றுள்ளார்.

அடுத்த ஆண்டு அக்டோபர் – நவம்பர் மாத வாக் கில் ஸ்பேஸ்எக்ஸ் குரூ – 3 என்ற திட்டத்தின் படி இவர்கள் சர்வதேச விண்வெளி நிலையத்திற்கு செல்ல உள்ளனர்.

ராஜா சாரி, அமெரிக்க விமானப்படையில் அதிகாரியாக பணியாற்றுகிறார். அவர் இந்த விண்வெளி பயணத் திட்டத்தின் கொமாண்டராகவும் இருப்பார் என நாசா தெரிவித்துள்ளது.

2017 இல் நாசாவின் விண்வெளி வீரராக சேர்ந்த ராஜா சாரிக்கு இது முதலாவது விண்வெளிப் பயணமாகும்.

2500 மணி நேர பறக்கும் அனுபவம் கொண்ட ராஜா சாரிக்கு எதிர்காலத்தில் நாசா சார்பில் நிலவுக்கு செல்லும் வாய்ப்பும் கிடைக்கும் என கூறப்படுகிறது.

# பாகிஸ்தானில் இருந்து டிரோன் மூலம் இந்தியாவுக்குள் கடத்தல் நடவடிக்கை

### ஆயுதங்கள், போதைப்பொருள்கள் சிக்கின



பாகிஸ்தானில் இருந்து டிரோன் மூலம் ஆயுதங்கள் மற்றும் போதைப்பொருள்களை இந்தியாவுக்குள் கடத்தும் கும்பலை சேர்ந்த 2 பேர் பஞ்சாப்பில் கைது செய்யப்பட்டனர்.

அவர்களிடம் இருந்து கமரா பொருத்தப்பட்ட ஒரு டிரோன், போதைப்பொருள்கள் மற்றும் கைத்துப்பாக்கிகள் பறிமுதல் செய்யப்பட்டன எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

அமிர்தரசஸ் சிறையில் அடைக்கப்பட்டுள்ள போதை மருந்து கடத்தல் கும்பலை சேர்ந்த 4 பேருடன், தற்போது கைது செய்யப்பட்ட 2 நபர்களுக்கு தொடர்பிருப்பதும், விசாரணையில் தெரியவந்துள்ளது.

# தடுப்பூசி செலுத்தப்பட்ட பின் பாதகமான முடிவுகள் வரலாம்

### இந்திய மத்திய சுகாதாரத்துறை எச்சரிக்கை

புதுடெல்லி,டிசெ.16

இந்தியாவில் தடுப்பூசி செலுத்தப்பட்ட பிறகு பாதகமான முடிவுகள் வர வாய்ப்பு உள்ளதாக மத்திய சுகாதாரத்துறை எச்சரித்துள்ளது.

இந்தியாவில் தடுப்பூசி செலுத்தப்பட்ட பிறகு பாதகமான முடிவுகள் வர வாய்ப்பு உள்ளதாக மத்திய சுகாதாரத்துறை எச்சரித்துள்ளது.

முந்தைய காலங்களில் குழந்தைகள் மற்றும் கர்ப்பிணிகளுக்கு செலுத்தப்பட்ட தடுப்பூசிகளால் பக்க விளைவுகள் ஏற்பட்டு உள்ளதாகவும், மாநில அரசுகள் இதற்கு தயாராக இருக்க வேண்டும் என மத்திய சுகாதாரத்துறை அமைச்சகம் எச்சரிக்கை விடுத்து உள்ளது.

இது குறித்து மத்திய அரசின் சுகாதாரச் செயலாளர் ராஜேஷ் பூண் கூறியதாவது:-

கொரோனாவுக்கான தடுப்பு மருந்துகளை வைக்க 41 ஆயிரம் குளிர்பதன சாதனங்கள், 45 ஆயிரம் ஐஸ் மூலம் பதப்படுத்தும் குளிர்பதனப் பெட்டிகள் உள்ளிட்ட சாதனங்கள் மாநில அரசுகளுக்கு வழங்கப்பட்டு உள்ளன. தடுப்பூசி இயக்கத்திற்கு இருபத்தி மூன்று துறைகள் அடையாளம் காணப்பட்டுள்ளன.

தடுப்பூசி போட்ட பின் ஏற்படும் பாதகமான நிகழ்வுகள் ஒரு முக்கியமான பிரச்சினையாகும். உலகளாவிய நோய்த்தடுப்பு திட்டத்தை நாங்கள் மேற்கொள்ளும்போது, இது பல தசாப்தங்களாக நடைபெற்று வந்து உள்ளது. தடுப்பூசி போட்ட பிறகு குழந்தைகள் மற்றும் கர்ப்பிணிப் பெண்களிடம் சில பாதகமான விளைவுகள் காணப்படுகின்றன.

மருந்தை குளிர் பதனிடச் செய்வதற்கான வழிகாட்டல்கள் அனைத்து மாநில அரசுகளுக்கும், யூனியன் பிரதேசங்களுக்கும் வழங்கப்பட்டுள்ளன. கொரோனாத் தடுப்பூசி மருந்துகளை குளிர்ச்சியான இடத்தில் வைத்து பாதுகாத்து பயன்படுத்துவதற்கான முறைகளை மாநில அரசுகளுடன் மத்திய அரசு பகிர்ந்து கொண்டிருப்பதாக தெரிவித்தார்.


கல்யாணமாலை

வட சர்வதேச திருமண சேவை

| மணமகன் விவரம் | மணமகள் விவரம் |
|---|---|
| பிறந்த திகதி - 1988.05.29 | பிறந்த திகதி - 1996.08.22 |
| மதம் - இந்து ஆசாரி | மதம் - இந்து ஆசாரி |
| நட்சத்திரம் - சுவாதி | நட்சத்திரம் - ஆயிலியம் |
| செவ் - 01இல் | பாவம் - 31 1/2 |
| பாவம் - 78 | சூ/ செவ் - 01இல் |
| கல்வி - Bsc, Qs | கல்வி - A/L |
| தொழில் - Engineer | தொழில் - தனியார் தாதி |
| எதிர்பார்ப்பு - Engineer Or Doctor | எதிர்பார்ப்பு - உத்தியோகம் Or வெளிநாடு |

Kalyanamalai Vada.com தினசரி முகநூலிலும், யாழ் காலைக்கதிர் பத்திரிகையில் காலையிலும் மாலையிலும் வெளிவரும் மணமக்களை நீங்களே தெரிவு செய்து எம்முடன் தொடர்புகொள்ள நாம் திருமணத்தை நிறைவேற்றித் தருவோம். மணமக்கள் விண்ணப்பப் படிவத்தினை புத்தகக் கடைகளிலும், பத்திரிகை விற்பனை நிலையங்களிலும் வாங்கி விண்ணப்பியுங்கள், முக நூலிலும் விண்ணப்பம் உண்டு. அலுவலக நேரம் காலை 9 தொடக்கம் 5 வரை. சனி, ஞாயிறு மற்றும் போயா தினங்களில் பதிவுகளை மேற்கொள்ள முடியும். பதிவுக் கட்டணம் 1000 + 300.

க.இல - 8000661351 வர்த்தக வங்கி, பருத்தித்துறை.

உப அலுவலகம், சந்தை வீதி, இமையாணன் மேற்கு, உடுப்பிட்டி.

077 3434 415

077 8578 528


# இந்திய நாடாளுமன்றின் குளிர்கால அமர்வு ரத்து!

### கொரோனாவால் இம்முடிவாம்



நாடாளுமன்றக் குளிர்காலக் கூட்டத் தொடர் ரத்து செய்யப்பட்டதற்கு 'இது நாடாளுமன்ற ஜனநாயகத்தின் அழிவு' என காங்கிரஸ் கட்சி கண்டனம் தெரிவித்து உள்ளது.

கொரோனா தொற்றுநோய்ப் பரவலைக் காரணம் காட்டி நாடாளுமன்றத்தின் குளிர்கால கூட்டத்தொடர் நடைபெறாது என்று மத்திய அரசு கூறி உள்ளது. டிசெம்பர் 14 ஆம் திகதி மக்களவை காங்கிரஸ் தலைவர் ஆதிர் ரஞ்சன் சவுத்ரிக்கு நாடாளுமன்ற விவகாரத்துறை அமைச்சர் பிரல்ஹாத் ஜோஷி எழுதிய கடிதத்தில் இதனை தெரிவித்து உள்ளார்.

இது எதிர்க்கட்சிகளிடம் விமர்சனங்களை எழுப்பி உள்ளது. காங்கிரஸ் இது நாடாளுமன்ற ஜனநாயகத்தின் அழிவு என்றும் தங்களை கலந்தாலோசிக்கவில்லை என்றும் கூறி உள்ளது.

# தோட்டத் தொழிலாளருக்கு ஜனவரி முதல் ஆயிரம் ரூபா சம்பளம் வழங்கவேண்டும்!

## விஜித ஹேரத் வலியுறுத்தல்




பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கு ஜனவரி மாதம் முதல் கட்டாயம் ஆயிரம் ரூபா வழங்கப்படவேண்டும் என மக்கள் விடுதலை முன்னணியின் பிரசார செயலாளர் விஜித ஹேரத் தெரிவித்தார்.

இந்த முறையும் தோட்டத் தொழிலாளர்களை ஏமாற்றினால் ஜனவரி முதல் தொழிற்சங்க நடவடிக்கையில் இறங்குவதற்குத் தோட்டத் தொழிலாளர்கள் தயாராகவே இருக்கின்றனர் எனவும் அவர் தெரிவித்தார்.

ஹற்றனில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இதன்போது அவர் மேலும் கூறுகையில் -

இலங்கையின் பொருளாதாரத்துக்குப் பெருந்தோட்டத் தொழிலாளர்கள் பெரும் பங்களிப்பைச் செய்தனர். இன்றும் செய்து வருகின்றனர்.

ஆனால் அவர்களின் வாழ்க்கை நிலைமை மேம்படவில்லை. சுகாதார வசதிகள் இல்லை. தமது பிள்ளைகளுக்குக் கல்வியை வழங்குவதற்கு உரிய வகையிலான கல்விக் கட்டமைப்பு இல்லை.

மாத சம்பளத்தைப் பெறுவதற்கான உரிமை இருந்தும் நாட்கூலிகளாகவே நடத்தப்படுகின்றனர். இந்நிலைமை மாறவேண்டும். நாட்டில் ஏனைய பிரஜைகளுக்குள்ள உரிமை அவர்களுக்கும் வழங்கப்படவேண்டும்.

தோட்டத் தொழிலாளர்களுக்கு காணி உரிமை வழங்கப்படும் என அரசாங்கங்கள் உறுதிமொழி வழங்கியிருந்தாலும் இன்னும் அது வழங்கப்படவில்லை. சட்டபூர்வமான பத்திரத்துக்குப் பதிலாக மாற்று பத்திரமே வழங்கப்பட்டுள்ளது.

பெருந்தோட்டத் தொழிலாளர்களுக்கு தற்போது 750 ரூபா நாட்சம்பளம் வழங்கப்படுகின்றது. அது அடிப்படை சம்பளம் இல்லை. தற்போது ஆயிரம் ரூபா வழங்கப்படும் எனக் கூறப்படுகின்றது. அந்தத் தொகைகூட போதாது. குறைந்தபட்சம் நாளொன்றுக்கு ஆயிரத்து 281 ரூபா வழங்கப்படவேண்டும்.

2021 ஜனவரி முதல் ஆயிரம் ரூபா பெற்றுக்கொடுக்கப்படும் என அரசாங்கம் வரவு செலவுத் திட்டத்தில் முன்மொழிந்துள்ளது.

ஆனால் தோட்ட நிறுவனங்கள் இணங்கினால்தான் இந்தச் சம்பள உயர்வு கிடைக்கும். அவ்வாறு இணங்காவிட்டால் கிடைக்காது.

நிறுவனங்கள் இணங்காவிட்டாலும் அந்தத் தொகையை அரசாங்கம் வழங்குவதற்கான நிதி வரவு செலவுத் திட்டத்தில் ஒதுக்கப்படவில்லை.

நிறுவனங்கள் சுவீகரிக்கப்படும் எனக் கூறப்பட்டாலும் அதற்கான சட்ட ஏற்பாடுகளும் இடம்பெறவில்லை. எது எப்படியிருந்தாலும் இந்தமுறை தோட்டத் தொழிலாளர்கள் ஏமாற்றப்படும் பட்சத்தில் தொழிற்சங்க நடவடிக்கைக்கு அவர்கள் தயாராகவே இருக்கின்றனர். - என அவர் மேலும் தெரிவித்தார்.

# இலங்கை முஸ்லிம்களைத் தமது நாட்டுக்கு வருமாறு மாலைதீவு முன்னாள் வெளிவிவகார அமைச்சர் அழைப்பு!

*கொழும்பு, டிசெ.16*

*இலங்கை முஸ்லிம்களை தமது நாட்டுக்கு வருமாறு மாலைதீவுஅரசாங்கம்அழைப்பு விடுக்க வேண்டுமென அந்த நாட்டின் முன்னாள் வெளிவிவகார அமைச்சர் தன்யா மமூன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.*

*கொரோனாவைரஸ் தொற்றால் உயிரிழக்கும் முஸ்லிம்களின் சடலங்களுக்கான இறுதிக் கிரியைகளை இலங்கை ஜனாதிபதியின் கோரிக்கைக்கு அமைவாக மாலைதீவில் நடத்துவது தொடர்பாக ஜனாதிபதி இப்ராஹிம் மொஹமட் சோலி ஆராய்ந்து வருகிறார் என அந்நாட்டு வெளிவிவகார அமைச்சர் அப்துல்லா ஹீட் தனது டுவிட்டர் பக்கத்தில் பதிவிட்டிருந்தார்.*

*இந்த நிலையிலேயே மாலைதீவின் முன்னாள் வெளிவிவகார அமைச்சர் தன்யா மமூன் இந்தக் கருத்துக்களை வெளியிட்டுள்ளார்.*

*மேலும் தெரிவித்துள்ள அவர், இலங்கை முஸ்லிம்களை மாலைதீவுக்கு வருமாறு மாலைதீவு அரசாங்கம் அழைப்பு விடுக்காதமை தனக்கு ஆச்சரியத்தை ஏற்படுத்தியுள்ளது எனத் தெரிவித்துள்ளார்.*

*கொரோனாவைரஸால் உயிரிழந்தவர்களுக்குத் தங்களின் மத நம்பிக்கையின் அடிப்படையில் இறுதி சடங்கை நடத்துவதற்கான சிறுபான்மை முஸ்லிம்களின் உரிமைகளை இலங்கை அரசாங்கம் மதிக்கவேண்டும் எனவும் அவர் வேண்டுகோள் விடுத்துள்ளார்.*



*இதேவேளை கொரோனா வைரஸால் உயிரிழந்த முஸ்லிம்களின் உடல்களை மாலைதீவில் அடக்கம் செய்வதற்கான அனுமதி அந்த நாட்டிடம் கோரப்பட்டமை தொடர்பாக இலங்கை அரசாங்கத்துக்கு எதுவும் தெரியாது என ஊடக பேச்சாளர் அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.*

# அநுராதபுரத்தில் கோர விபத்து தாயும் குழந்தையும் உயிரிழப்பு!

## 8 பேர் கைது

அநுராதபுரம் - பாதெனிய வீதியில் பஹலபலல்ல பகுதியில் இடம்பெற்ற விபத்தில் தாயும் குழந்தையும் உயிரிழந்துள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

கெப் ரக வாகனமொன்று குறித்த இருவரையும் மோதியதில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளதுடன், இதன்போது கெப்ரக வாகனத்தில் 11 பேர் பயணித்துள்ளனர் எனவும் தெரிவிக்கப்படுகின்றது.

இதனையடுத்து, சம்பவம் தொடர்பில் 8 பேர் இதுவரையில் கைது செய்யப்பட்டுள்ளமையுடன், வாகன ஓட்டுநர் உட்பட மூவர் தப்பிச் சென்றுள்ளனர் எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்த நிலையில், விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகள் இடம்பெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# டுபாய் மற்றும் கட்டாரிலிருந்து 511 பேர் நாடுவந்தடைந்தனர்

**கொரோனா தொற்றுப் பரவலை அடுத்து விதிக்கப்பட்ட பயணக் கட்டுப்பாடுகள் காரணமாக வெளிநாடுகளில் சிக்கித் தவித்த மேலும் பல இலங்கையர்கள் நாடு திரும்பியுள்ளனர்.**

**அந்தவகையில் இன்று காலை 8.30 மணி வரையிலான கடந்த 24 மணி நேரத்தில் 511 பேர் நாடு திரும்பியுள்ளனர் என அறிவிக்கப்பட்டுள்ளது.**

**இன்று (புதன்கிழமை) மட்டும் 140 பேர் டுபாயிலிருந்தும், 137 பேர் கட்டாரிலிருந்தும் நாடு திரும்பியுள்ளனர் என விமான நிலையத் தகவல்கள் தெரிவிக்கின்றன.**

**இவ்வாறு நாடு திரும்பிய அனைத்து பயணிகளுக்கும் பி.சி.ஆர். சோதனை மேற்கொள்ளப்பட்டு தனிமைப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக அதிகாரிகள் கூறியுள்ளனர்.**

**இதற்கிடையில், கடந்த 24 மணி நேரத்தில் 531 பேர் பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்திலிருந்து வெளிநாடுகளுக்குச் சென்றுள்ளனர்.**

# சுன்னாகம் சந்தை வியாபாரிகளுக்கும் லயன்ஸ் கழகத்தால் முகக்கவசங்கள்!





யாழ்ப்பாணம், டிசெ.16

யாழ்.மாவட்டத்தில் கொரோனா கொத்தணியின் அபாயப் பிரதேசங்களாக மருதனார்மடம், சுன்னாகம் ஆகிய பிரதேசங்கள் காணப்படுகின்றன. உடுவில் சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையால் இன்று காலை சுன்னாகம் சந்தை வியாபாரிகளுக்கு பி.சி.ஆர். பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டன. பரிசோதனைக்காக வந்திருந்த வியாபாரிகளுக்கு சுன்னாகம் லயன்ஸ் கழகத்தினரும் சுன்னாகம் லியோக் கழகத்தினரும் இணைந்து முகக்கவசங்களை வழங்கிவைத்தனர்.

இந்த முகக்கவசங்களை நீர்கொழும்பு ஒறியன்ற் லயன்ஸ் கழகத்தைச் சேர்ந்த லயன் பிளஸிடஸ் பீற்றர் வழங்கியிருந்தார்.

இந்த முகக்கவசங்களை சுன்னாகம் லயன்ஸ் கழகத் தலைவரும் வலி.வடக்கு பிரதேசசபை உறுப்பினருமான லயன் பா.மரியதாஸ், சுன்னாகம் லயன்ஸ் கழகச் செயலாளரும் வலி.வடக்கு பிரதேசசபை உறுப்பினருமான லயன் சி.ஹரிகரன், சுன்னாகம் லயன்ஸ் கழக நிர்வாக உத்தியோகத்தரும் வேலணை பிரதேச சபை வருமானவரிப் பரிசோதகருமான லயன் சி.கௌரீஸன் ஆகியோருடன் சுன்னாகம் லியோ கழக உறுப்பினர்களும் இணைந்து வழங்கினர்.

லயன் பிளஸிடஸ் பீற்றர் யாழ்.மாவட்டத்தின் சகல பிரதேசங்களிலுமுள்ள 30 லயன்ஸ் கழகங்களுக்கும் தொற்றுநீக்கி மருந்துகளையும் முகக்கவசங்களையும் வழங்கி சகல கழகங்களூடாகவும் யாழ்.மாவட்டத்தின் சகல பிரதேசங்களுக்கும் தனது சேவையை சென்றடையச் செய்தமை குறிப்பிடத்தக்கது.




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள Green Media House Pvt Ltd. நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 16.12.2020 இல் வெளியிடப்பெற்றது.